**ஜூலை – 10**

# TNPSC துளிகள்

- உத்தரப் பிரதேசத்தின் தாத்ரியில் உள்ள மார்ஸ்க்-கான்கார் (Maersk–CONCOR) உள்நாட்டு கொள்கலன் முனையத்தில் இந்தியாவின் முதல் EXIM (ஏற்றுமதி-இறக்குமதி) தரத்திலான கப்பல் கொள்கலன் அறிமுகப்படுத்தப்பட்டது.
- பீகாரின் முங்கேரில் உள்ள ஓர் ஆலமரம் சுமார் 700 ஆண்டுகள் பழமையானது என மதிப்பிடப் பட்டுள்ளதுடன் இது உலகின் மிகவும் பழமையான துல்லியமாக வயதறியப் பட்ட ஆலமரமாக அறிவியல் பூர்வமாக அடையாளம் காணப்பட்டுள்ளது.
- ராஜஸ்தானின் பலோத்ரா மாவட்டத்தில் உள்ள பச்சபத்ராவில் இந்தியாவின் முதல் புதிய கட்டமைப்புடன் கூடிய ஒருங்கிணைந்த சுத்திகரிப்பு மற்றும் பெட்ரோலிய வேதிப்பொருள் வளாகத்தை இந்தியப் பிரதமர் திறந்து வைத்தார்.
- துன்பத்தில் உள்ள பெண்களுக்கு ஆதரவளிப்பதற்காக, தேசிய மகளிர் ஆணையம் (NCW) தனது 24×7 செயல்படும் மகளிர் உதவி எண்ணான 14490 ஐ விரிவுபடுத்தியுள்ளது.
  - இந்த உதவி எண் புகாரைப் பதிவு செய்யவும், உளவியல் ஆலோசனை வழங்கவும் மற்றும் டிஜிட்டல் தளம் மூலம் பரிந்துரை ஆதரவை வழங்கவும் வழிவகை செய்கிறது.
- குடிமக்கள் மைய சேவைகளுக்கு செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் புதிய தொழில்நுட்பங்களை புதுமையாகப் பயன்படுத்தியதற்காக 2026 ஆம் ஆண்டிற்கான மின்-ஆளுமைக்கான தேசிய விருதுகளில் ICMR-MINDS தங்க விருதை வென்றது.
- ஊரக வளர்ச்சி, வறுமை ஒழிப்பு, உணவுப் பாதுகாப்பு மற்றும் நிலையான வாழ்வாதாரங்களின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 6 ஆம் தேதி உலக ஊரக வளர்ச்சி தினம் அனுசரிக்கப் படுகிறது.
  - 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு "Financing the First Mile of Food Systems" என்பதாகும்.
- உலகின் மிகவும் பரவலாகப் பேசப்படும் மொழிகளில் ஒன்றாக கிஸ்வாஹிலியை மேம்படுத்தவும், கலாச்சாரங்களுக்கு இடையேயான உரையாடல், அமைதி மற்றும் கலாச்சார பன்முகத்தன்மையை ஊக்குவிக்கவும் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 7 ஆம் தேதி உலக கிஸ்வாஹிலி மொழி தினம் அனுசரிக்கப்படுகிறது.
  - 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு "Kiswahili for Peace, Solidarity and Global Economic Diplomacy" என்பதாகும்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தமிழ்நாட்டின் AAY அரிசி ஒதுக்கீடு

- அதிகாரப்பூர்வ தரவுகளின்படி, அந்த்யோதயா அன்ன யோஜனா (AAY) திட்டத்தின் கீழ் கடந்த ஏழு ஆண்டுகளில் ஐந்து முறை தமிழ்நாடு தனக்கு ஒதுக்கப்பட்ட அளவை விட குறைவான அரிசியையே பெற்றுள்ளது.
- தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் (NFSA), 2013 இன் கீழ், AAY திட்டத்தின் தகுதியான குடும்பங்கள் தற்போது குடும்பத்திற்கு மாதம் 35 கிலோ உணவு தானியங்களைப் பெறுகின்றன.
- ஒரு குடும்பத்திற்கு அதிகபட்சமாக 35 கிலோவுக்கு உட்பட்டு, ஒரு நபருக்கு மாதம் 7 கிலோ உணவு தானியங்களை வழங்க மத்திய அரசு முன்மொழிந்துள்ளது.

- குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கையைப் பொருட்படுத்தாமல், தற்போதுள்ள ஒரு குடும்பத்திற்கு 35 கிலோ என்ற உரிமையை தொடர்ந்து வழங்குமாறு மத்திய அரசைத் தமிழ்நாடு அரசு கேட்டுக் கொண்டுள்ளது.
- தமிழ்நாட்டில் ஏறத்தாழ 69.27 லட்சம் பயனாளிகளை உள்ளடக்கிய சுமார் 18.65 லட்சம் AAY ரேஷன் கார்டுகள் உள்ளன.

Antyodaya Anna Yojana (AAY) cards in Tamil Nadu: Allocation and Off take (drawal)


Antyodaya Anna Yojana (AAY) targets the poorest of the poor, providing them with 35 kg of food grains per family per month free of cost.

Values in tonnes

| Year | Allocation | Off take (drawal) | (in %) | Distributed |
|---|---|---|---|---|
| 2019-20 | 6,89,246 | 7,50,046 | 108.82 | |
| 2020-21 | 6,99,628 | 6,86,052 | 98.06 | |
| 2021-22 | 7,04,819 | 5,42,877 | 77.02 | |
| 2022-23 | 7,43,975 | 5,50,171 | 73.95 | |
| 2023-24 | 7,51,547 | 5,52,537 | 73.52 | |
| 2024-25 | 7,38,492 | 5,85,126 | 79.23 | |
| 2025-26 | 7,39,718 | 8,01,574 | 108.36 | |
| 2026-27* | 1,30,462 | 1,90,135 | | 1,21,709 |

## தமிழ்நாடு நலத்துறை சீர்திருத்தம்

- ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் பெயரை 'சமூக நீதித் துறை' என தமிழ்நாடு அரசு பெயர் மாற்றம் செய்துள்ளது.
- மனிதவள மேலாண்மைத் துறையால் வெளியிடப்பட்ட அரசாணை (GO) மூலம் இந்த மாற்றம் அறிவிக்கப்பட்டது.
- தமிழ்நாடு அரசு அலுவல் விதிகள், 1978 இன் தொடர்புடைய விதிகளிலும் அரசு திருத்தம் செய்துள்ளது.
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சகத்தை சமூக நீதி அமைச்சகம் என பெயர் மாற்றம் செய்ததை தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.
- இந்த பெயர் மாற்றமானது சமூக நீதி மற்றும் உள்ளடக்கிய நலன் என்ற பரந்த நோக்கத்துடன் துறையின் பெயரை சீரமைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.



# தேசியச் செய்திகள்

## நீரடி ஒளி இழை உணர்திறன் அமைப்பு

- இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் (IOR) கடற்படுகை அடிப்படையிலான நீர்மூழ்கிக் கப்பல் கண்காணிப்பிற்காக உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட நீரடி ஒளி இழை உணர்திறன் அமைப்பை (UFOSS) நிறுவுவதற்கான திட்டத்தை DRDO தொடங்கி உள்ளது.
- ஒலியியல் மற்றும் நீரியல் அளவீட்டு உணரிகளின் நிலையான நீரடி வலைப்பின்னலான UFOSS நீருக்கடியில் நடக்கும் செயல்பாடுகளை தொடர்ந்து கண்காணிக்கிறது.
- கடற்படுகையில் பொருத்தப்பட்ட ஒலி உணர் கருவிகள் மூலம் உந்துவிசை சத்தம், பொறி இயந்திர அதிர்வுகள் மற்றும் இயந்திர ஒலிகளைப் படம்பிடிப்பதன் மூலம் இது நீர்மூழ்கிக் கப்பல்களைக் கண்டறிகிறது.
- இந்த அமைப்பு நீரடி ஒளியிழை வடங்கள் மூலம் ஒலிச் சமிக்ஞைகளை ஒளியியல் தரவுகளாக மாற்றுகிறது மற்றும் அவற்றை கடற்படை தரை நிலையங்களில் பகுப்பாய்வு செய்கிறது.
- இது கடல்-தரக் கூறுகள் மற்றும் 20 ஆண்டு கால செயல்பாட்டு ஆயுட்காலத்துடன் வடிவமைக்கப் பட்டுள்ளதுடன் இது இந்தியாவின் கடல்சார் பாதுகாப்புத் திறன்களை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




## போதைப்பொருள் தேவை குறைப்புக்கான தேசிய செயல் திட்டம்

- போதைப்பொருள் பழக்கத்தைத் தடுக்கவும், மறுவாழ்வை ஊக்குவிக்கவும், சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் ஆனது போதைப்பொருள் தேவை குறைப்புக்கான தேசிய செயல் திட்டத்தை (NAPDDR) தொடங்கியுள்ளது.
- இக்கட்டமைப்பு தடுத்தல், விழிப்புணர்வு ஏற்படுத்துதல், திறன் மேம்பாடு, சிகிச்சை, மறுவாழ்வு மற்றும் பாதிக்கப்பட்ட நபர்களை சமூகத்தில் மீண்டும் ஒருங்கிணைத்தல்

ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.

- 2019 ஆம் ஆண்டு தேசிய அளவிலான கணக்கெடுப்பின்படி, இந்தியாவில் 7 கோடிக்கும் அதிகமான மக்கள் போதைப்பொருள் பயன்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர் என மதிப்பிடப் பட்டுள்ளது.
- அமைச்சகமானது தனது போதை மீட்பு மற்றும் மறுவாழ்வு வலையமைப்பை நாடு முழுவதும் 768 மையங்களாக விரிவுபடுத்தியுள்ளது.
- போதை மீட்புக்கான கட்டணமில்லா உதவி எண் 14446 ஆதரவை வழங்கும் அதே வேளையில் நஷா முக்த் பாரத் அபியான் விழிப்புணர்வையும் போதைப்பொருள் இல்லாத இந்தியாவையும் ஊக்குவிக்கிறது.





# சர்வதேசச் செய்திகள்

## UNCTAD நுகர்வோர் பாதுகாப்பு நிபுணர்கள் அமர்வு - இந்தியா

- சுவிட்சர்லாந்தின் ஜெனிவாவில் வர்த்தகம் மற்றும் மேம்பாட்டுக்கான ஐக்கிய நாடுகளின் மாநாட்டினால் (UNCTAD) ஏற்பாடு செய்யப்பட்ட நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் மற்றும் கொள்கை குறித்த நிபுணர்களின் அரசுகளுக்கிடையேயான குழுவின் (IGE) ஒன்பதாவது அமர்வின் தலைவராக இந்தியா நியமிக்கப்பட்டுள்ளது.
- சர்வதேச அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு கட்டமைப்பான நுகர்வோர் பாதுகாப்பிற்கான ஐக்கிய நாடுகளின் வழிகாட்டுதல்கள் (UNGCP) நுகர்வோர் பாதுகாப்புச் சட்டங்கள் மற்றும் கொள்கைகளை உருவாக்குவதில் நாடுகளுக்கு வழி காட்டுகிறது.
- 1985 ஆம் ஆண்டில் ஏப்ரல் 16 அன்று ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையால் (UNGA) 39/248 தீர்மானத்தின் மூலம் UNGCP முதன்முதலில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பின்னர் இது 1999 ஆம் ஆண்டில் விரிவுபடுத்தப்பட்டு 2015 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டது.

❖ இது நுகர்வோர் உரிமைகள், தயாரிப்பு பாதுகாப்பு, நியாயமற்ற வர்த்தக நடைமுறைகளிலிருந்து பாதுகாப்பு, நுகர்வோர் கல்வி, டிஜிட்டல் வர்த்தக பாதுகாப்பு மற்றும் நிலையான நுகர்வு ஆகியவற்றை மேம்படுத்துகிறது.

❖ ஒரு பிணைப்பற்ற மென்மையான சட்டக் கருவியான UNGCP நுகர்வோர் பாதுகாப்பு அமைப்புகளை வலுப்படுத்துவதற்கான உலகளாவிய கட்டமைப்பை வழங்குகிறது.




## இந்தியா-இஸ்ரேல் இருதரப்பு முதலீட்டு ஒப்பந்தம்




❖ இந்தியா மற்றும் இஸ்ரேல் ஒரு புதிய இருதரப்பு முதலீட்டு ஒப்பந்தத்தில் (BIA) கையெழுத்திட்டதன் மூலம், இந்தியாவின் புதிய முதலீட்டு ஒப்பந்த மாதிரியை ஏற்றுக் கொண்ட முதல் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பைச் (OECD) சேர்ந்த நாடாக இஸ்ரேல் மாறியுள்ளது.

❖ இந்த ஒப்பந்தமானது 1996 ஆம் ஆண்டு கையெழுத்திடப்பட்டு 2017 ஆம் ஆண்டில் முடித்துக் கொள்ளப்பட்ட முந்தைய இருதரப்பு முதலீட்டு ஒப்பந்தத்திற்கு (BIT) மாற்றாக அமைகிறது.

- இருதரப்பு முதலீட்டு ஒப்பந்தம் (BIA) என்பது முதலீட்டாளர் உரிமைகள் மற்றும் தகராறு தீர்க்கும் வழிமுறைகள் மூலம் முதலீடுகளைப் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் இரு நாடுகளுக்கிடையே செய்யப் படும் ஒரு சட்டபூர்வ ஒப்பந்தமாகும்.
- இருதரப்பு முதலீடுகளை அதிகரித்தல், நியாயமற்ற முறையில் கையகப் படுத்துவதற்கு எதிரான பாதுகாப்பை வழங்குதல், இழப்பீட்டை உறுதி செய்தல் மற்றும் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை மேம்படுத்துதல் ஆகியவற்றை இந்த ஒப்பந்தம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தியாவின் முதலீட்டு ஒப்பந்தக் கட்டமைப்பானது 2015 ஆம் ஆண்டின் மாதிரி இருதரப்பு முதலீட்டு ஒப்பந்தத்தை அடிப்படையாகக் கொண்டதுடன் இது முதலீட்டாளர் பாதுகாப்பு மற்றும் அரசாங்கத்தின் ஒழுங்குமுறை அதிகாரங்களை சமநிலைப் படுத்துகிறது.

## நன்மைக்கான செயற்கை நுண்ணறிவு உலகளாவிய ஆணையம்





- சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியத்தின் (ITU) அழைப்பின் பேரில் கஜகஸ்தான், நன்மைக்கான செயற்கை நுண்ணறிவு உலகளாவிய ஆணையத்தில் ஒரு நிறுவன உறுப்பினராக இணைந்துள்ளது.
- நம்பகமான செயற்கை நுண்ணறிவை (AI) மேம்படுத்துவதற்கும், டிஜிட்டல் பிளவைக் குறைப்பதற்குமான நடைமுறை அணுகுமுறைகளை உருவாக்குவதற்காக ITU இன் கீழ் இந்த ஆணையம் நிறுவப்பட்டது.
- இதில் அரசாங்கங்கள், சர்வதேச நிறுவனங்கள் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களைச் சேர்ந்த 40 க்கும் மேற்பட்ட உலகளாவிய தலைவர்கள் இடம் பெற்று உள்ளனர்.
- இது நம்பகமான AI ஐ உருவாக்குதல், டிஜிட்டல் பிளவைக் குறைத்தல், மேம்பட்ட தொழில் நுட்பங்களுக்கான அணுகலை மேம்படுத்துதல் மற்றும் நிலையான வளர்ச்சிக்கு AI பங்களிப்பதை உறுதி செய்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.
- சுவிட்சர்லாந்தின் ஜெனிவாவில் ITU ஆல் ஏற்பாடு செய்யப்பட்ட நன்மைக்கான செயற்கை நுண்ணறிவு உலகளாவிய உச்சிமாநாட்டின் ஒரு பகுதியாக இந்த ஆணையம் தொடங்கப்பட்டது.
- இந்த ஆணையம் கொள்கைகளைப் பகிர்ந்துகொள்வதற்கும், AI ஆளுமை அணுகு முறைகளை உருவாக்குவதற்கும், உலகெங்கிலும் உள்ள AI தொழில் நுட்பங்களுக்கு சமமான அணுகலை உறுதி செய்வதற்குமான ஒரு தளமாக செயல் படுகிறது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## Placenta-on-Chip தளம்

- மகப்பேறு செயல்பாடுகளைப் படிக்கவும் மருந்துகளைச் சோதிக்கவும் மும்பையைச் சேர்ந்த இந்திய அறிவியலாளர்கள் ஆய்வகத்தில் வளர்க்கப்படும் placenta-on-chip தளத்தை உருவாக்கியுள்ளனர்.
- மும்பையின் இந்திய தொழில்நுட்பக் கழகம் மற்றும் ICMR (இந்திய மருத்துவ ஆராய்ச்சி சபை) – NIRRCH (தேசிய இனப்பெருக்க மற்றும் குழந்தை சுகாதார ஆராய்ச்சி நிறுவனம்) ஆராய்ச்சியாளர்களால் இந்தத் தொழில்நுட்பம் உருவாக்கப் பட்டது.
- placenta-on-chip என்பது ஒரு நுண்ணோட்டப் பாய்மவியல் சாதனமாகும் என்பதுடன் இது கட்டுப்படுத்தப் பட்ட ஆய்வகச் சூழலில் மனித நஞ்சுக்கொடியின் செயல் பாடுகளைப் பிரதிபலிக்கிறது.
- இந்த தளம் கருவுக்கு ஆக்சிஜன் மற்றும் ஊட்டச்சத்துக்களை மாற்றுவதிலும், கழிவுப் பொருட்களை அகற்றுவதிலும் நஞ்சுக்கொடியின் பங்கை மாதிரியாக்குகிறது.
- ப்ரீக்ளாம்ப்சியா/கர்ப்பகால வலிப்புக்கு முந்தைய நிலை மற்றும் கர்ப்பகால நீரிழிவு போன்ற கர்ப்ப காலச் சிக்கல்கள் குறித்த ஆராய்ச்சி மற்றும் மருந்துப் பரிசோதனைக்கு இதைப் பயன்படுத்தலாம்.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## தமிழ்நாட்டில் எகிப்திய கழுகுகளின் எண்ணிக்கை சரிவு


- தமிழ்நாட்டில் அருகி வரும் இனமான எகிப்திய கழுகுகளுக்கு (நியோஃப்ரோன் பெர்னோப்டெரஸ்) இனப்பெருக்கத் திட்டம் உள்ளிட்ட அவசரப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என இயற்கை ஆர்வலர்கள் வலியுறுத்தி உள்ளனர்.

- நீலகிரியில் இந்த இனம் உள்ளூரில் அழிந்துவிட்டது மற்றும் தமிழ்நாட்டில் உறுதிப்படுத்தப் பட்ட செயலில் உள்ள இனப்பெருக்கத் தளங்கள் எதுவும் இல்லை.
- டைக்ளோஃபெனாக் (கால்நடை ஸ்டெராய்டு அல்லாத அழற்சி எதிர்ப்பு மருந்து (NSAID)), மின்சாரம் தாக்குதல், விஷம் வைத்தல், வாழ்விட இடையூறு மற்றும் உணவு கிடைப்பது குறைதல் ஆகியவை முக்கிய அச்சுறுத்தல்களாகும்.
- தமிழ்நாடு மற்றும் கர்நாடகா முழுவதும் 150 க்கும் குறைவான எகிப்திய கழுகுகளே எஞ்சியிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- பம்பாய் இயற்கை வரலாற்றுச் சங்கமானது (BNHS) தமிழ்நாட்டில் எகிப்தியக் கழுகு பாதுகாப்பு இனப்பெருக்கத் திட்டத்தை முன்மொழிந்துள்ளது.
- வாழ்விடப் பொருத்தத்தின் அடிப்படையில் நீலகிரி, தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் கோயம்புத்தூர் ஆகியவை சாத்தியமான பாதுகாப்புத் தளங்களில் அடங்கும்.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலகளாவிய கடவுச்சீட்டு குறியீடு 2026




- உலகளாவிய கடவுச்சீட்டு குறியீடு (GPI) 2026 இல் இந்தியாவின் தரவரிசை 125 வது இடத்திற்குச் சரிந்துள்ளதுடன் இது முந்தைய ஆண்டை விட ஒரு இடம் சரிந்துள்ளது.
- இந்தக் குறியீட்டை குளோபல் சிட்டிசன் சொல்யூஷன்ஸ் (GCS) வெளியிடுகிறது மற்றும் இயக்கம், முதலீடு மற்றும் வாழ்க்கைத் தர நன்மைகள் அடிப்படையில் கடவுச்

சீட்டுகளை தரவரிசைப்படுத்துகிறது.

- மேம்பட்ட இயக்கம் (50%), முதலீடு (25%) மற்றும் வாழ்க்கைத் தரம் (25%) ஆகிய வகைகளின் கீழ் 14 குறிகாட்டிகளைப் பயன்படுத்தி கடவுச்சீட்டுகளை இது மதிப்பீடு செய்கிறது.
- உலக வங்கி, உலகப் பொருளாதார மன்றம் (WEF) மற்றும் நிலையான வளர்ச்சி அறிக்கை போன்ற நிறுவனங்களின் தரவுகளை இந்தக் குறியீடு பயன்படுத்துகிறது.
- 2026 ஆம் ஆண்டுக் குறியீட்டில் ஸ்வீடன், சுவிட்சர்லாந்து, பின்லாந்து, ஜெர்மனி, டென்மார்க் மற்றும் நெதர்லாந்து ஆகியவை மிகவும் வலுவான கடவுச்சீட்டுகளைக் கொண்டுள்ளன.

# முக்கிய தினங்கள்

## உலக உயிரியல் தயாரிப்பு தினம் 2026 – ஜூலை 07




- உயிரியல் தயாரிப்புகள் மற்றும் நிலையான எதிர்காலத்திற்கு அவற்றின் பங்களிப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2021 ஆம் ஆண்டு முதல் உலக உயிரியல் பொருளாதார சங்கத்தால் இந்த நாள் ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது.
- புதுப்பிக்கத்தக்க உயிரியல் வளங்களிலிருந்து முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ தயாரிக்கப்படும் தயாரிப்புகளான உயிரியல் தயாரிப்புகள் புதை படிவ அடிப்படையிலான தயாரிப்புகளுக்கு மாற்றாகவோ அல்லது துணைப் பொருளாகவோ அமைகின்றன.
- உயிரியல் தயாரிப்புகள் புதைபடிவ வளங்களைச் சார்ந்திருப்பதைக் குறைப்பதன் மூலமும், சுழற்சிப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதன் மூலமும், கழிவுகளைப் பயன்படுத்துவதன் மூலமும் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைப்பதன் மூலமும் உயிரியல் பொருளாதாரத்தை ஆதரிக்கின்றன.
- 2026 ஆம் ஆண்டுப் பிரச்சாரமானது Bioproducts are everywhere – often without us even noticing என்ற செய்தியை முன்னிலைப்படுத்தியது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★